DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 12/2023**

Deposition of Witness: PW2.

| | | | |
|---|---|---|---|
| Name | பாலமுருகன் | Father Name – | செட்டியப்பன் |
| Age | 60 | Village – | போடிநாயக்கனூர் |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.08.2026.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. வழக்குரை சொத்தை பார்வையிட நீதிமன்ற ஆணையர் மற்றும் நில அளவையர் வந்தபோது இரண்டுமுறையும் நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். நான் ஏந்த காரணத்திற்காக அன்றைய தேதிகளில் அங்கு வந்தேன் என்றால் வாதி ராஜேந்திரன் எனக்கு பழக்கமானவர் என்பதால் வந்தேன். வாதி எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 30 வருடங்களாக தெரியும். நான் 30 வருடங்களுக்கு மேலாக நில தரகர்வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்குரை சொத்தை வாதி 2010ம் ஆண்டு கிரையம் வாங்கியபோது நான் நில தரகராக இருந்து வாங்கி கொடுத்தேன் என்றால் சரிதான். நான் நில தரகராக இருந்து வழக்குரை சொத்தை வாங்கிகொடுத்தவர் என்ற முறையிலும், வாதி எனது நண்பர் என்ற முறையிலும் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

2. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 3வது பத்தியில் பிரதிவாதி வாகனத்தை நிறுத்தி இடைஞ்சல் செய்ததாக வாதி சொன்னதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு நேரடியாக இந்த விபரம் தெரியுமா என்றால் தெரியம். பிரதிவாதி நடக்க முடியாத ஊனமுற்ற ஒரு நபர் என்றால் சரிதான். அவரை யாராவது ஒருவர் துாக்கி கொண்டு சென்று தான் அவருடைய வாகனத்தில் உட்கார வைக்க முடியும் என்றால் சரிதான். அவருடைய வீட்டின் அருகில் அவருடைய வாகனத்தை நிறுத்தி யாராவது ஒருவர் அவரை அமர

வைத்தால் தான் அவரால் வெளியே செல்ல முடியும் என்றால் சரிதான். அவருடைய இயலாமையின் காரணமாக தான் அந்த வாகனத்தை வீட்டின் அருகே நிறுத்தியுள்ளார் என்றால் சரிதான், வழக்குரை சந்தானது 4 ½ அடி அகலம் தான் உள்ளது, அதில் அவர் வாகனத்தை நிறுத்தி வருவதால் வாதியின் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக உள்ளது.

3. வாதிக்கு எந்த இடைஞ்சலும் செய்யாமல் அவருடைய வீட்டு வாசலில் அந்த வாகனத்தை ஏற்றி நிறுத்துகிறார் என்றால் வாதி நடந்து செல்ல முடியாத அளவிற்கு வாகனத்தை நிறுத்திகிறார். பிரதிவாதி பயன்படுத்தி வரும் வாகனத்தின் அகலம் சுமார் 1 ½ இருக்குமா என்றால் சரியல்ல 3 அடி இருக்கும். வாதி இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் வழக்குரை சந்து பாதையில் செல்வதற்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என தாக்கல் செய்துள்ளார். எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த புகார் கொடுக்கும்போது நான் காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன். மேற்படி புகாரில் பிரதிவாதி வழக்குரை சந்தில் அவருடைய வாகனத்தை நிறுத்தக்கூடாது என்று வாக்குவாதம் ஏற்பட்டதாக தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வாக்குவாதத்தில் இருந்து வாதிக்கும் பிரதிவாதிக்கும் முன்விரோதம் ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த முன்விரோதத்தின் அடிப்படையில் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அவருடைய பிரச்சனைக்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

4. எனது நிரூபண வாக்குமூலத்தில் வழக்குரை பாதையை பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக நீதிமன்ற ஆணையர் குறிப்பிட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பாத்ததில்லை. நான் சொல்வதுபோல் எந்த ஆக்கிரமிப்பும்இல்லை என்றும், நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் வீடு பூர்வீகமான வீடு என்றும், அதில் பிரதிவாதியும் அவரது குடும்பத்தினரும் தலைமுறை தலைமுறையாக

குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதி குடியிருக்கக்கூடிய வீட்டின் கட்டிட அமைப்பு அவருடைய தாத்தா காலத்தில் இருந்தே அவ்வாறு தான் இருந்து வருகிறது என்றால் எனக்கு தெரிந்து 2010 ம் ஆண்டு முதல் அந்த கட்டிடம் அவ்வாறு தான் உள்ளது. வாதி எனக்கு வேண்டியவர் என்பதால் அவர் சொல்லிக்கொடுத்தது போல் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் வழக்குரை சொத்தை வாதிக்கு வாங்கி கொடுத்ததால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.08.05 11:37:19 +0530

District Munsif,
Bodinayakanur.